# வால்ட்டேரும் வேதாத்திரி மகரிசியும்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

www.banukumar.in



# வால்ட்டேரும் வேதாத்திரி மகரிசியும்

பிரெஞ்சு நாட்டில் தோன்றியவர் சிந்தனையாளர் வால்ட்டேர்.
இந்தியாவில் அவதரித்தவர் வேதாத்திரி மகரிசி.

வால்டேரும் வேதாத்திரி மகரிசியும் மெய்யியலார்கள். மானுடத்தின் மூட நம்பிக்கைகளை வேரறுத்தவர்கள்.

வால்டேர் எழுத்துக்கள் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட காரணமாக அமைந்தது. வேதாத்திரியாரின் எழுத்துக்கள் ஆன்மீகத்தில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியது.

வால்டேர் 1694_இல் பாரிஸ் நகரில் பிறந்தார். அவரது தந்தை சராசரியான சட்ட வல்லுநர்.

வேதாத்திரி மகரிசி தமிழகத்தின் கூடுவாஞ்சேரியில் 1911 ல் பிறந்தார். தந்தை ஒரு ஏழை நெசவாளி.




வால்டேர் சட்டம் பயின்றார். வேதாத்திரி மகரிசி மூன்றாம் வகுப்பு வரைதான் பயின்றார்.

வால்ட்டேர் ஒரு கவிஞர். நாடகாசிரியர். கட்டுரையாளர். நாவலாசிரியர். சிறுகதை எழுத்தாளர். வரலாற்றாசிரியர். தத்துவஞானி, சுதந்திரமான முற்போக்குச் சிந்தனை இயக்கத்தின் திருத்தூதராக அவர் திகழ்ந்தார். .

வேதாத்திரி மகரிசியும் பன்முக ஞானம் படைத்தவர், கட்டுரையாளர், எழுத்தாளர், கவிஞர், சமூக சீர்திருத்தவாதி, முற்போக்கு சிந்தனையாளர், ஆன்மீக புரட்சியை ஏற்படுத்தியவர், உலக அமைதியின் திருத்தூதராக திகழ்ந்தவர்.

வால்டேர் எழுதிக் குவித்த நூல்கள் கணக்கற்றவை.   அவர் எழுதிய நுல்களின் பட்டிலைவிட, அவர் தம் வாழ்நாளில் பரப்புவதற்குப் பாடுபட்ட அடிப்படைக் கொள்கைகளே முக்கியமானவை.

வால்டேர் தனது வாழ்நாளில் பிரத்தியேகமாக கடிதங்கள் எழுதுவதில் ஈடுபட்டு கிட்டத்தட்ட 20,000 கடிதங்களை அனுப்பியுள்ளார்.

தியோடர் பெசுடர்மேன் இந்த கடிதங்களை தொகுத்து 1964 இல் நிறைவு செய்தார்.

இக்கடிதங்கள் 102 தொகுதிகளை நிரப்பியுள்ளன . இக்கடிதங்கள் விசித்திரமான சொற்பொழிவுகள் மட்டுமல்ல, அன்பான நட்பு, மனிதாபிமான உணர்வு மற்றும் கவர்ச்சியான எண்ணங்கள் ஆகியவற்றையும் கொண்ட ஒரு விருந்து" என்று ஒரு வரலாற்று ஆசிரியர் கூறுகிறார்.

வேதாத்திரி மகரிசி சுமார் 2000 க்கும் மேற்பட்ட கவிதைகளையும் 70 க்கும் மேற்பட்ட நூல்களையும் தந்துள்ளார்.

வால்டேர் கி.பி.1778 ஆம் ஆண்டு வரை சுமார் 84 ஆண்டுகள் வாழ்ந்தார். வேதாத்திரி மகரிசி 2006 ஆம் ஆண்டு வரை 95 ஆண்டுகள் வரை வாழ்ந்தார்.

## வால்டேர் வாழ்க்கை வரலாறு (1694 – 1778)

வால்டேர் 1694_இல் பாரிஸ் நகரில் பிறந்தார்.  அவரது தந்தை சராசரியான சட்ட வல்லுநர்.

வெகு நோஞ்சான் குழந்தையாக இவரைப் பெற்ற தாய்  அவரைக் கவனித்துக் கொள்ள  வாய்ப்பு இன்றி ஏழு ஆண்டுகளிலேயே உயிர் நீத்தார்.

ஆதலினால் நோயாளியாகவே வளர்ந்தார்; வாழ்ந்தார்.
உடல் பலவீனம் மன எழுச்சிக்குத் தடையாக இல்லை.



இளம் வயதிலேயே சமூகத்தின் அவலங்களைக் கண்டு மனம் பதறி சீற்றம் கொண்டு எழுதத் தொடங்கினார்.

அவரது அனல் பறக்கும் எழுத்துகளைப் படித்த பிரெஞ்சு இளைஞர்கள்ஆவேசம் கொண்டு எழுந்தனர்.

ஆட்சி பீடம் ஆத்திரம் கொண்டு அவரை பாஸ்டில் சிறைச்சாலையில் அடைத்தது. அந்த இருண்டசிறைச் சாலைக்குள்ளேயிருந்து பிரெஞ்சுப் புரட்சியின் வால்டேர் பொன்மொழிகள் தீச்சுடர்கள்எழுத்துகளாக வெளிவந்தன.

அப்போது வால்டேர் என்ற பெயரிலேயே எழுதினார். அந்தப் பெயரே வரலாற்றில் நிலைத்து விட்டது. பிறகு ஆட்சியாளர்-களிடையே அச்சம் தோன்றி வால்டேரை நாடு கடத்தி விட்டார்கள்.

அங்கிருந்து கொண்டே நாட்டையும், சமுதாயத்தையும், அரசியலை-யும் தம் எழுத்துகளால் சீர்திருத்தினார்.
அவர் சொன்னார்......

" இந்தியர்கள் எல்லாம் அதிசாதுவான மனிதர்களாக இருந்து வருகின்றார்கள். அவர்களுடைய மதமும் சீதோஷ்ண நிலையும் அவர்களை அமைதியுள்ள சாதிப்பிராணிகளாக வளர்த்திருக்கின்றன.

நம்முடைய ஆட்டுத் தொழுவங்களிலும் புறாக்கூடுகளிலும் வெட்டியழிப்பதற்காகப் பிராணிகளை வளர்க்கிறோமே அதுபோலவே தான் இந்தியர்கள்உள்ளார்கள் என்றும் _ அங்கே அந்தணர்கள் வெகு காலமாக மன்னர்களாக இருந்து வந்திருக்கின்றனர்,

தெய்வீக ஆதிக்கம் அந்தப் பரந்த தேசத்தில் நிலையூன்றியது போல இந்த உலகில் வேறு எந்த தேசத்திலும் இல்லை" என்று நம் நாட்டைப் பற்றி கூறியுள்ளார்.

- **மனிதனின் சிந்தனைச் சுதந்திரத்திற்காகவும், மனித உரிமைகளுக்காகவும் போராடிய அப்பெருமகன் தமது 83ஆம் வயதில் 30.05.1778 _ அன்று என் எதிரிகள்மீது எவ்வித வெறுப்புகளின்றி மூட நம்பிக்கைகளை எதிர்த்துக் கொண்டே சாகிறேன் வால்டேர் என்று எழுதி கையொப்பமிட்டு விட்டு முடிவெய்தினார்.**

நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் மறுக்கிறேன்;
ஆனால் அதைச் சொல்ல உனக்குள்ள உரிமைக்காகச்
சாகும் வரை போராடுவேன் என்று சொன்ன உரிமை வேட்கையின் சின்னம் மாமனிதர் வால்டேர்.

அவர் இறந்து விட்டார். அவர் எண்ணப் படியே பாரிசுக்கு 100 மைல் தூரத்தில் உள்ள சீன நதிக்கரை இடமான ரோமிலியில் அவர் அடக்கம் செய்யப் பட்டார்.

அவரது இறப்புச் செய்திகூடப் பல நாள்களுக்குப் பத்திரிகைகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை.



அவர் அடக்கம் செய்யப்பட்ட மறுநாள் தேவாலயத்திலிருந்து தாக்கீது வந்தது. இறந்தோரைப் புதைக்கும் புனித பூமியில் அவர் புதைக்கப்படக் கூடாது என்று. இது வருவதற்கு முதல் நாளே அவர் புதைக் கப்பட்டு விட்டார்.

கிறித்துவ மத உலகம் எவ்வளவு கோபம் கொண்டிருந்தது அவர்மீது என்பதை இச்சம்பவம் சுட்டிக் காட்டும்.

அவர் மத நிந்தகர், இவர்கள் கூறும்

கடவுளை ஏற்காதவர், மூடநம்பிக் கைகளைச் சுட்டெரித்தவர், பகுத்தறிவாளர். இவை போதாதா மதவாதி களுக்கு?

13 ஆண்டுகளுக்குப்பிறகு, பிரான்சின் தேசிய சட்டமன்றத்தின் ஆணைப்படி அவரது கல்லறை திறக்கப்பட்டு, எலும்புகள் எடுத்து வரப்பட்டு பாரிசில் மீண்டும் புதைக்கப்பட்டன.

1791 ஜூலை 6-ஆம் தேதி நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில் வால்டேரின் நினைவுக்கு என எழுதப்பட்டு அவரது எலும்புகள் எடுத்து வரப் பட்டன.

வந்த வழியெல்லாம் மக்கள் வெள்ளம். விழாவில் கலந்து கொள்வது போல் ஆடை அணிந்து உற்சாக வரவேற்பு அளித் தார்கள்.

ஜூலை 19-இல் பாரிசுக்கு வண்டி வந்தது. அவரது எலும்புகள் அடங்கிய பெட்டி எடுத்து வரப்பட்டு பாஸ்டிலி சிறையின் உயர் கோபுரத்தில் வைக்கப்பட்டது.

இந்த இடத்தில்தான் சர்வாதி காரம் உங்களைச் சங்கிலியால் பிணைத்தது. இன்று அதே இடத்தில் மக்கள் உங்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறார்கள் என்ற வரிகள் பொறிக்கப் பட்டிருந்தன.

மறுநாள் பாரிஸ் நகரெங்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நாடகக் கொட்டகைக்குக் கொண்டு வரப்பட்டது.

அங்கே பிரெஞ்சுப் புரட்சி கீதமான விழித்தெழுங்கள் மக்களே! உங்களைப் பிணைத்திருக்கும் சங்கிலிகளை உடைத் தெறியுங்கள் என்ற பாடல் இசைக்கப்பட்டு புரட்சியின் கர்த்தாவுக்கு வீர வணக்கம் செலுத்தப் பட்டது.

அங்கிருந்து வண்டி புறப்பட்டது. இரு பக்கத்திலும் இருந்த எல்லா கட்டடங்களின் சாளரங்களும் திறந்திருந்தன.

அதன்வழியே மக்கள் திரள் ஊர்வலத்தைப் பார்த்தன, ஒரே ஒரு சாளரத்தைத் தவிர…………..

அந்தச் சாளரத்தின் பின்னால் அமர்ந்திருந்தது - மேரி அன்டாய்னட் - ”ரொட்டி கிடைக்க வில்லையா? அப்படி யானால் கேக்

சாப்பிடுங்களேன்” என்று பாரிஸ் நகரத்துப் பசித்த மக்களைப் பரிகாசம் செய்த லூயி மன்னனின் பத்தினி!

கில்லட்டின் கத்தியின் கீழே தன் கழுத்தை வைக்கும் நாளுக்காகக் காத்திருந்தவள்.

இரவு பத்து மணிக்கு இலேசான மழை. தோண்டப்பட்டிருந்த குழியில் வால்டேரின் எலும்புகள் கொண்ட பெட்டி இறக்கப்பட்டு மண் மூடப் பட்டது.

இந்தக் குழிக்குப் பக்கத்திலேதான் நான் சிந்திக்கிறேன், அதனால் தான் இருக்கிறேன் என்கிற புகழ்மிக்கச் சொற்களுக்குச் சொந்தக்காரரான தெகார்தே புதைக்கப்பட்டிருந்தார்.

நிரந்தரமான நினைவுச் சின்னத்தை பிரெஞ்ச் அரசு வால்டேருக்கு நிறுவியது. பாரிசை விட்டுப் போய் ஏறத்தாழ 30 ஆண்டுகள் அவர் வாழ்ந்த பெர்னி நகருக்கு பெர்னி வால்டேர் எனப் பெயர் சூட்டியது.

(அந்த ஊரில்தான் சுதந்திரத் தொழிற் சங்கமான (கம்யூனிஸ்ட் பிடிப்பில்லாத) பன்னாட்டு அரசு அலுவலர் கூட்டமைப்பு (Public Services Int ernational) இயங்கி வருகிறது.

---

## வேதாத்திரி மகரிசி வாழ்க்கை குறிப்பு (கி.பி.1911-2006)

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்பன், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்தி கதைகளையும், புராணக் கதைகளையும் அறிந்து கொண்டார்.



இவரது குடும்பசூழல்,   இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்ப தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

18வது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளை கற்றார் மகரிஷி.


தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்று தேர்ச்சிப் பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார்.

பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

## ஆன்மிகத் தேடல்

தனது சகோதரியின் மகளை (லோகாம்பாள்) மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார்.



இல்லறத்திலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபாடு அதிகமிருந்த போதிலும் தனது ஆன்மீகத்தேடலில் மிகுந்த ஆர்வத்துடன் நாட்டம் கொண்டிருந்தார்.

சித்தர்களின் நூல்களைக் கற்று, தியானத்தில் வெகுவாக ஈடுபட்டு தன்னை அறிதல் என்ற அகத்தாய்வு முறையில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டார்.

இவரது ஆழ்ந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக தனது 35வது வயதில் ஞானம் பெற்றார்.

அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளில்- பல உன்னதமான ஆன்மீகக் கருத்துக்களை- தனது எழுத்துக்களின் மூலமாகவும், உரைகளின் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர்- தனது நெசவு தொழிலை முற்றிலும் விட்டு விட்டு- தன்னை முழுமையாக ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார்.


## நூல்கள் இயற்றல்

இந்தப்பிரபஞ்சத்தைப் பற்றியும்- மனித வாழ்க்கையைப் பற்றியும்- தவநிலையில்- தான் பெற்ற கருத்துக்களை -பல கவிகளாகவும், கட்டுரைகளாகவும்- புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட- விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த- தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில்- எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார்.

எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை -மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.



1957ல் மகரிஷி ‘உலக சமாதானம்’ என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார்.

தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு- இவருக்கு கிட்ட - அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட- 1958-ஆம் ஆண்டில் -வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம்- இன்று இந்தியாவிலும், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

## அருட்பெருஞ்சோதி நகர்

கொங்கு நாட்டில்- பொள்ளாச்சி நகருக்கு அருகே- வால்பாறை மலையோரத்தில்- ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில்- அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம்- வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

அன்பொளி என்னும் -ஆன்மீக இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

## மறைவு

வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்.

## **வால்ட்டேரும் வேதாத்திரியும்.**

மனிதன் என்பவன் சுதந்திரமாகப் படைக்கப்பட்டவன். அவன் தன்னைத் தானே ஆள வேண்டும். மனிதர்களுக்கு மேலே கொடுங்கோலர்கள் இருந்தால் அவர்களை ஆட்சி பீடத்திலிருந்து தூக்கியெறிய வேண்டும்! என்று சொல்லி ‘‘பொதுமக்களே விழித்தெழுங்கள்! கைவிலங்குகளை உடைத்தெறியுங்கள்!’’ என்ற அறைகூவல் பிரெஞ்சு மக்களின் நெஞ்சங்களிலே அனலை மூட்டியது!

வால்டேர் வழங்கிய மூன்று மூல முழக்கங்களான சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது. உலக வரலாற்றில் பெரும் மாற்றத்தையே நிலைப்படுத்தியது.

வால்டேர் மிகத் தீவிரமாக வலியுறுத்திய கொள்கைகள் பேச்சுரிமையும் பத்திரிகைச் சுதந்திரமும் ஆகும்.

வேதாத்திரி மகரிசியும் ஆன்மீகத்தில் புரட்சியை ஏற்படுத்தினார். சுதந்திரம் சகோதரத்துவம், சமத்துவம் ஆகியவற்றை வேதாத்திரியத்திலும் காணலாம்.

## சிந்தனையின் சிற்பிகள்.

ஒரு நாடு சிந்திக்கத் தொடங்கி விட்டால் அந்த நாட்டை எந்தச் சக்தியாலும் நிறுத்தி வைக்க முடியாது" என்றார் பிரெஞ்சு நாட்டுத் தத்துவ அறிஞரான வால்டேர்.

"சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய் சிந்தித்தே தெளிவாய்" என்றார் வேதாத்திரி மகரிசி.

""சிந்தனை விளக்கம் விழிப்பு செயல்பாடு

சீவனை விடுதலைவழி வாழ வைக்ககும்.

அந்தணர் இவ்வுயர் வழி வாழ்வார்

அறிவை உயர்த்தும் செயல்அவர் வாழ்வு.

முந்தைய இருள்வழி பழிச்செயல் பதிவுகள்

முனைந்துபின் மேலும் அவ்வழி செயல்வேகமும்,

எந்தஓர் மனவளக்கலை மூலம் போகுமோ.

ஏற்றுவோம் அதனையே அகத்தவம் என்று." (ஞாக.650)

# இரண்டு ஒழுக்க பண்பாடு

தீமை செய்யும் வாய்ப்பு நாளுக்கு நூறுமுறை வரும். நன்மை செய்யும் வாய்ப்பு ஆண்டுக்கு ஒரு முறை தான் வரும்" என்பார் வால்டேர்.

வேதாத்தரி மகரிசி இரண்டொழுக்கப் பண்பாடாக மானுடத்தை வழிநடத்தி வருகிறார்.

1. நான் என் வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனதுக்கும் உயிருக்கும் துன்பம் தரமாட்டேன்.
2. துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

## உழைப்பும் வறுமையும்

உழைத்துக் கொண்டே இருங்கள். அப்படி இருந்தால் வறுமை உங்களிடம் எட்டியே பார்க்காது என்பார் வால்டேர்.

வேதாத்திரி மகரிசி சொல்கிறார்.....

1. ஆக்கமுறையால் அன்றிப் பிறர் உழைத்து ஆக்கிவைத்த பொருள் கவர்ந்து பிழைக்க மாட்டோம்" என்றும்--
2. உழைப்பினால், உடலும், உள்ளமும், உலகமும் பயன்பெறும் உணர்வீர்" என்றும்--
3. உழைப்பவன் உண்ண வேண்டும். உண்பவன் உழைக்க வேண்டும். இது இயற்கைக்கு ஒத்த நீதி. இந்த நீதி தவறுகின்ற இடத்தில்தான் ஐந்து பெரும் பழிச்செயல்கள் பிறக்கின்றன" என்றும்----
4. "உடல் உழைப்பாலும், ஒவ்வொருவரும் பெறுகின்ற ஊதியத்தைக் கொண்டே மனிதன் வாழ வேண்டும்" என்றும் சொல்லுகிறார்.

## அன்பு வள்ளல்கள் யார்? வேதாத்திரியம் விடை சொல்கிறது.

"உழைப்பை முதலாய் வைத்து
உழுது நெல் விளைவித்து,

தழைத்துள்ள உலகோரைத்

தாய்போன்று காத்து, என்றும்

பிழைத்திருக்கத் தொண்டாற்றும்

பெருந்தகையீர்! உங்களை நாம்

அழைக்கின்றோம்! அறஊற்று!

அன்பு வள்ளல்கள் என்று? ((ஞாக.759)

## பெண்மையின் பெருமையை உணர்வோம்”

”ஆணை அடக்கிப் பண்படுத்தவே ஆண்டவன் பெண் பிறவியைப் படைத்திருக்கிறான்” என்பார் வால்டேர்.

வேதாத்திரி மகரிசி......

”கற்பு, அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், தூய்மை, ஒற்றுமை ஆகிய குணங்களின் மொத்த உருவம்தான் பெண்” என்றும்----

ஆண்களுக்கு பெண்கள் அடிமையும் அல்லர், உணர்ந்தவர்களும் அல்லர், சமமானவர்களுமல்ல.

ஆனால் இயற்கையமைப்பாலும் சமுதாய அமைப்பிலும் பெண்கள் ஒரு சிறப்பு நிலையுடையவர்கள் என்பதை அனைவரும் உணர்ந்து ஆண்களும் பெண்களும் ஒருங்கிணைந்த உயர்கருத்தில் வாழ வேண்டும்” என்றும்----

”பெண் துணையால் வாழ்கின்றோம்” என்றும் கூறுகிறார்.

”பெண்ணினத்தின் பெருமதிப்பை உணர்ந்தே உள்ளேன்.

பேருலகில் வாழுகின்ற மக்கள் எல்லாம்,

பெண்ணினத்தின் அன்பளிப்பே எனில் வேறென்ன

பெருமை இதை விட எடுத்துச் சொல்லுவதற்கு?

பெண்ணினத்தின் இயல்புபெற்ற மக்கள் தம்மை

பிறர்வளர்க்க அனுமதியார், மனமும் ஒவ்வார்.

பெண்ணினத்தின் விடுதலைக்கும் இந்தத் தியாகம்,

பேருலக அமைதிக்கும் அவசியம் ஆம்." (ஞாக.904)

நன்றி - வால்ட்டேரும் வேதாத்தி மகரிசியும்-

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## அரசும் மக்களும்,

அரசாங்கம் தவறாக இருக்கும் போது நாம் சரியாக இருப்பது மிகவும் ஆபத்தானது." என்பார் வால்டேர்.

"வாழத்தெரியாதோர் வாழும் நாட்டில் ஆளத்தெரியாதோர் ஆட்சியே நடைபெறும்" என்பார் வேதாத்திரி மகரிசி.

"வாழத் தெரியாதேர் பெரும்பாலோர் வாழ்நாட்டில்

ஆளத் தெரியாதோர் ஆட்சியே நடைபெறும்.

கோழை, கயவர், கொலைஞர். தடியர்கள்,

ஏழை. நோயுற்றோர் எங்குமே காட்சியாம்," (ஞாக.129)

## உதவி செய்வது தொண்டாகும்

உலகத்திலிருந்து நீ ஏற்பது குறைவாகவும் உலகத்துக்கு நீ வழங்குவது அதிகமாகவும் இருக்கட்டும்" என்பார் வால்டேர்.

"இன்முகத்தோர் எல்லோருக்கும் உதவி செய்வது தொண்டாகும்" என்பார் வேதாத்திரி மகரிசி.

## உயர் புகழ் எது?

விரைவிலே புகழ் பெற்றவன் அப்பெயரை காப்பற்றிக் கொள்வது பெரியபாரம் தான்" என்பார் வால்டேர்.

”கடமையின் மூலமாகப் பெறும் புகழ்தான் உயர் புகழாகும்” என்பார் வேதாத்திரி மகரிசி.

”புகழுக்கு விரும்புவையேல் அந்த வேட்பே

புகழ் அணுகாமல் துரத்தும் சத்தி யாகும். (மா.பக்.78)

”புகழுக்கு விரும்புவாயேல் அந்த வேட்பே

புகழ் அணுகாமல் துரத்தும் சக்தியாகும்.

புகழ் ஒருவர் கடமை எனும் மலர் மணம் ஆம்

புகழ் மனித சமுதாய நற்சான்றாகும்.” (மா.பக்.78)

## ஆணவம் துன்பத்திற்கு காரணம்.

”ஆணவம் கொண்டவருக்கு ஆபத்து எப்பொழுது வருமோ அது ஆண்டவனுக்கே தெரியாது” என்பார் வால்டேர்.

”மனிதனின் துன்பமெல்லாம் இயற்கையை அறியாமலும், அல்லது அறிந்தும் அதனை மதியாமலும் அவன் நடந்து கொள்வதாலேயே தோன்றுகின்றன. இந்நிலையைத்தான் ஆணவம் என்பார்கள்” என்பார் வேதாத்திரி மகரிசி.

## மனிதனின் அடித்தளத்தில் இருப்பது அன்பு

”உலகில் மிகவும் தெய்வீகமானது எது? சக மனிதனிடம் நீங்கள் காட்டும்அன்புதான்” என்பார் வால்டேர்.

வேதாத்திரி மகரிசி-------

”மனிதன் என்பதற்கு அடையாளம் அவனிடம் உள்ள அன்புதான்” என்றும்–

அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமையெல்லாம் அன்பின் செயலாகும்” என்றும்–

ஒவ்வொரு மனிதனின் அடித்தளத்தில் இருப்பது அன்பும் கருணையும்தான்" என்றும்,

"இங்கே வந்து வாழ்கிறான். மனிதன் அவனே கடவுள்தான். வாழ்பவர்களே கடவுள்தான் என்பதால், வாழும் மக்களிடத்தில் நம் எண்ணம், சொல், செயல் மூலம் அன்பு செலுத்துவோமே யானால், அதுவே கடவுளுக்கு நாம் செய்யக்கூடிய தொண்டு. நம்மிடமிருதுந்து இதைத் தவிர கடவுள் எதையும் எதிர்பார்க்கவில்லை. கடவுளுக்கு எதுவும் தேவையில்லை" என்றும் வேதாத்திரி மகரிசி சொல்கிறார்.

## உரிமை தத்துவம் உரிமை தத்துவம்

"நீ சொல்வதை நான் ஏற்கவில்லை. ஆனால், அதைச் சொல்வதற்கு உனக்குள்ள உரிமையை சாகும் வரை நான் பாதுகாப்பேன்" என்பார் வால்டேர்.

வேதாத்திரி மகரிசியோ----

"குடல்தேவைக் கேற்றபடி உணவு கிட்டாக்

குறைபாடு மனிதரிடை வாழ்வில் அன்று,

உடல்வலுவால் பிறர் உணவைக் கவர்தலாச்சு

உத்தமர்கள் இதைஒழிக்க முறைவ குத்தார்

கடல் சூழ்ந்த உலகில் பல இடத்தில் மக்கள்

கருத்திலர் இதை "உரிமைத் தத்துவமாய்க் கொண்டார்"

கொடல் வாங்கலாய் விரிந்து. பணம் உண்டாக்கி.

குறுகிய நோக்கம் பெருக்கும் வித்தாய்ப் போச்சு" (உலகசமாதானம் பா.30)

மானுடத்தை தங்களது சிந்தனைகள் வாயிலாக சிந்திக்க வைத்த மாபெரும் சிந்தனையாளர்கள் வால்டேர் வேதாத்திரி மகரிசி

சிந்தனைகளை ஏற்போம். அவர்கள் வழியில் ஆனந்தமாக பயணிப்போம். வாழ்க வளமுடன்.

## துணைநின்ற நூல்கள்


1. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி
2. அன்பொளி மாத இதழ்கள், வேதாத்திரி மகரிசி
3. மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து.
4. உலகசமாதானம், வேதாத்திரி மகரிசி.
5. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000- அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்
6. Voltaire Almighty: A Life in Pursuit of Freedom by Roger Pearson
7. A Pocket Philosophical Dictionary by John Fletcher (translator) & Voltaire
8. Letters on the English வோல்ட்டயர்
9. Complete Works of Voltaire வோல்ட்டயர்
10. Essay on the Manners...வோல்ட்டயர்


# Youtube speech titles

வாழ்கவளமுடன். “VETHATHIRIAM BANUKUMAR” என்ற தலைப்பில் YOUTUBE-ல் கீழ்க்கண்ட தலைப்புகளில் சிந்தனைகளைப் பகிர்ந்துள்ளோம். வாய்ப்புள்ளவர்கள் பயன்பெற்று இன்புறலாம்.

## இணையதளத்தில் ஜென்புத்தரும் தாயுமானவரும்

இணையதள முகவரிகள்….. VETHATHIRIAM BANUKUMAR மற்றும் THAYUMANAVAR BANUKUMAR

ஜென் புத்தரும் தாயுமானவரும்

பொருளடக்கம்

1. ஜென்னும் தாயுமானவரும். https://youtu.be/LXgKxgHMtFo
2. விஷய ஞானம் விபரீதமானது https://youtu.be/VliywleKo6Y

3. மரணத்தைக் கண்டும் அஞ்சத் தேவையில்லை https://youtu.be/At5zMeJavF8
4. படிப்புஅற்றுக் கேள்விஅற்று https://youtu.be/n0_ZEytgHXM
5. வார்த்தைகளால் விளக்க முடியாது
6. செத்தால் தான் தெரியும்? https://youtu.be/WynKLPhhFoU
7. வழியும் கோப்பை. https://youtu.be/o4eI_2ySwzQ
8. பாலைவத்தில் இரண்டு ஜென் சீடர்கள் https://youtu.be/6DVQsFgBPi4.
9. ஒன்றும் கொண்டு வரவில்லையே! https://youtu.be/t4ir-tbDou8
10. குரு-சிஷ்ய உறவு
11. உயிராசையும் இல்லை! பண ஆசையும் இல்லை!
12. கர்வம் அடங்கி அமர்ந்தார் https://youtu.be/C6HSCQrxung
13. யோகப் பயிற்சியே விழிப்புணர்வு தரும் https://youtu.be/K8-ebuziOhc.
14. தேடும் பருவம் இது கண்டீர். https://youtu.be/r6BTjDcnWRI
15. முச்சுஅற்றுச் சிந்தை அற்று
16. ஜென் தியானம் https://youtu.be/HZVTIvwke_Y
17. தேநீர்! விழிப்புணர்ச்சி! அவ்வளவுதான் https://youtu.be/OUQTn-Gi6rU.
18. மனமும் மாயையும். https://youtu.be/EsATPOIW3JI
19. மனவுறுதி https://youtu.be/d7L46-WM0_w
20. கெட்டவழி ஆணவப்பேய் https://youtu.be/8WN_GYdRoSQ
21. பைபிளும் ஜென் ஆசிரியரும் https://youtu.be/xZlbo-E-M3I
22. இயேசுவும் தீர்க்கதரிசியாரும்https://youtu.be/MJeQoAXPZtM
23. நீரும் இல்லை…நிலவும் இல்லை. . https://youtu.be/IrL4-T9wFQg
24. புத்தர் என்றால் என்ன? https://youtu.be/rAZbdsvGM5g
25. போதி தர்மர், மனதைச் சாந்தப்படுத்துகிறார் https://youtu.be/K5ZG_hHhTzA
26. இடிக்க முடியாத மாளிகை https://youtu.be/stJ3LwMaR5A
27. வாய் ஏன் பராபரமே? https://youtu.be/GqlYLL-AKL0
28. நிராசை யின்றேல்தெய்வ முண்டோ?https://youtu.be/HktwDQ7dQKg
29. அவனே ஞானி. https://youtu.be/TUr_w7W0o4c
30. வாக்கற்று மனமும் அற்று https://youtu.be/hH8TfUnjVVY
31. பக்குவப்பட்ட மனம் https://youtu.be/xwFQ9WcHqT8
32. ஞானவிளிம்பில் நிற்கும் துறவி https://youtu.be/UG2JkRIkkI8
33. முக்தியின் வழி எது?https://youtu.be/Xe3bBnhtvEY
34. ஆழமாக சிந்தித்தால் மெஞ்ஞானம்.https://youtu.be/2HePxJyygeQ

35. தாயுமானவர் கையில் எடுத்த ஆயுதம்!https://youtu.be/v89HI-_9jd4

36. புகைபிடிக்கும் ஜென்https://youtu.be/z6SVvGVH4q4

37. ஞானமடைந்த மனிதன் https://youtu.be/WJGWWJwa71Y

38. மனமும் வெளியாகின்றதுhttps://youtu.be/Ph3czRaQMFw

39. வாழ்க்கை வாழ்வதற்கேhttps://youtu.be/jA3QeGhclI4

40. தாயுமானவர் சொல்லும் ”கடந்த நிலை”

எது? https://youtu.be/B_FJv6gHXA0

41. அகங்காரத்தை அறுக்க பணிவு வேண்டும்?

42. கள்ளமனம் துள்ளுவது ஏன்?https://youtu.be/pyuzkbJofss

43. பெற்றதை ஏது என்று சொல்வேன்? https://youtu.be/T-d6HYn2CJg

44. மாயை ஒழிய அவன் அருளைப் பெற வேண்டும் –

45. காற்றும் அல்ல, கொடியும் அல்ல https://youtu.be/yW04toFGNWE

46. அகில வாழ்வு அத்தனையும் சொப்பனம் கண்டாய்?
? https://youtu.be/Zey6MX-XvB8

47. பேச்சுப் பிதற்றல்

48. மன்னி அழி யும் ஜகம்-https://youtu.be/hk-q3NXqji0

49. துன்பம் அவசியமா? https://youtu.be/OSZei_Ztuhg

50. தெளிவான ஞான விளக்கம் https://youtu.be/csIF79OL6Js

51. பற்றுவிட்ட மனம் வெளியாகின்றது https://youtu.be/Wn7Oje3C4rI

52. இமைப்பொழுதும் நீங்காத ஜென் https://youtu.be/hUtpYK6JUgg

53. முயற்சி-பயிற்சி – தேர்ச்சி

54. கவிதை எழுதுவது எப்படி?

55. வேண்டுவேன் இந்த உடல்

56. காசப்பாவின் போதனை?https://youtu.be/kv4RSr6vEAA

57. ஒவ்வொரு நாளும் ஆனந்தமே!! https://youtu.be/xu6yvpF1vsw

58. புத்தருக்கு - மனம் ஒரு வேலைக்காரன்தான்

59. யான்தான் இரண்டுஅற்று இருந்ததும் ஆங்கே

60. ஆணவம் அடங்க பணிவுதான் வேண்டும்? https://youtu.be/SvGT-XpLDAI

61. முயற்சி + பயிற்சி = தவம்.https://youtu.be/Ru1GwxrDMhc

63. ஆணவஇருள் எனும் கடல் https://youtuhttps:/D9N8ij1tQHQ
64. நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் https://youtu.be/9OtZLQlOXC4
65. இன்பநிலை எப்போது வரும்? https://youtu.be/Z2Jk9RbtsMA
66. என்னை யார் என்று அறியாத
அங்கதேசத்தில் https://youtu.be/CEjdTFb4GqM
67. பண்பட்ட மனம் https://youtu.be/HpMRlK0bOAM
68. சலனமற்ற மனம் https://youtu.be/zAy6LkFatHA
69. மனம் பக்குவப்பட என்ன செய்ய
வேண்டும்? https://youtu.be/oum5OjwUpiY
70. உலகு நிலையாமை https://youtu.be/tjtkirQXzb0
71. மனதை அறிந்தால் மனம் வலிமை
பெறும். https://youtu.be/yOc3eX9LWL4
72. மன முடிச்சுகள். https://youtu.be/VTfmeL-s_sg
73. முன் நோக்கிச் செல் https://youtu.be/Ma4Ruk5krYU
74. குணம்இலா மனம் https://youtu.be/9RTITWnc7Bs
75. விரைந்துவரும் ஆனந்தேமே! https://youtu.be/qSQeO_fNiu0
76. எந்தாய் கேள் https://youtu.be/T5Hc-wwF0dY
77. சொர்க்கமா? நரகமா? https://youtu.be/aXNmcbVPsZw
78. இறப்பும் பிறப்பும் பொருந்த https://youtu.be/8VFjAyCdAxM
79. உள்ளம் உருக உபாயம் செய்தாண்டி https://youtu.be/0z0x3x-9eQM
80. தர்க்கமிட்டு குதர்க்கம்விட்டு
81. பூரணம் ஆக்கினான் https://youtu.be/iHepLQVcpVs
82. மௌனம் எனும் மந்திரமொழி https://youtu.be/Wx2RLC064H0
83. கொள்ளை நோயை ஒழித்தல் https://youtu.be/BQMrJVrEa1E
84. முயன்று பெறுவதுதான் பதவி https://youtu.be/uj2ELYSFX8M
85. ஆணவத்தை அடக்கிய புத்தர் https://youtu.be/kCXwHAae7Pk
86. பொய் குற்றச்சாட்டு https://youtu.be/gOqPnZJ80C4
87. --ஆண்டவன் அளித்ததே! https://youtu.be/vZZ25fkkp9g
88. --எதிர்கொண்டு போராடுங்கள் https://youtu.be/ItaQqrO6IqY
89. பொறாமைத் தீணை அணைத்தல் https://youtu.be/Zn1eYOIVW8A
90. மயக்குறும் மனம் அணுகாப் பாதை எது? https://youtu.be/ePNW5Lfq_is
91. பார்வையாளனாக இருங்கள் https://youtu.be/rVOijK8B6jY
92. சேமித்த பிறகு செலவழி. https://youtu.be/V4jyz6CKOFA
93.
94. மாசுஅற்ற அன்பர் நெஞ்சே https://youtu.be/lRSXhq1jMoU

95. ஊசல் ஆடும் மனமே பதற்றமடையும் https://youtu.be/1o35zp-qPUc
96. எனக்கு குரு யாரும் இல்லை. https://youtu.be/mR3gRxWnMmo
97. தெளிவு குருவார்த்தைக் கேட்டல். https://youtu.be/xCZMxYvnQaQ
98. திரும்பப் பெற முடியாதது எது? https://youtu.be/SiaP4pkr4-A
99. அற்றது பற்றெனில் உற்றது வீடு https://youtu.be/hCWutJnei_w
100.பொறாமையா? பதவி ஆசையா? https://youtu.be/ecSn6Ldwq1s
101. தன்னை அறியாது ஜகம் இருந்துவிட்டால் https://youtu.be/JJsHc_BE1rQ
102.இல்லாத ஒன்றிற்கு ஆசைப்பட்டால்…https://youtu.be/xsGncZTdsls
ஜென் என்றால் என்ன? https://youtu.be/z7r5h8n-c1A

வாழ்க வையகம்! வாழ்க வையகம்!! வாழ்க வளமுடன்!!!